செய்தி வெளியீடு எண்441 நாள்.12.6.2008

## செய்தி வெளியீடு

## மாண்புமிகு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சர் திரு.முரளி தியோரா அவர்களுடன் மாண்புமிகு தமிழக உணவுத் துறை அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் சந்திப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் புது டெல்லியில் மாண்புமிகு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சர் திரு.முரளி தியோரா அவர்களை 12.06.2008 வியாழக்கிழமையன்று மத்திய தகவல் மற்றும் தொலை தொடர்புத்துறை அமைச்சர் திரு.ஆ. ராஜா அவர்களுடன் சந்தித்து, தமிழகத்தில் இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய எரிவாயு அடுப்பு வழங்கும் திட்டத்திற்கு 2008-2009ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தில் எரிவாயு இணைப்பு இல்லாத ஏழை எளிய மக்களுக்கு 8 இலட்சம் இணைப்புகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டு ரூ.160 கோடி இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 2008-2009 ஆண்டில் இலவச எரிவாயு இணைப்புடன் கூடிய அடுப்பு வழங்கும் திட்டத்திற்கு 8 இலட்சம் இணைப்புகளை உடனடியாக வழங்க வேண்டும் என வலியுறுத்தினார்கள். மாண்புமிகு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சர் திரு.முரளி தியோரா அவர்கள் இது குறித்து விரைவில் பரிசீலித்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார்கள்.

இச்சந்திப்பின்போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் திரு. கே. சண்முகம், இ.ஆ.ப., மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. க. பணீந்த்ர ரெட்டி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.